1989 அக்டோபர் 31]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(10.55)

(உ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்.) திருத்தச் சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: இச்சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஊ) மாநகராட்சிச் சட்டங்கள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை-வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (1—11—1989) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 10-56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

144. எஸ்டேட் அதிகாரிக்குண்டான அதிகாரத்தினை சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் ஏனைய அதிகாரிகளுக்கு ஒப்படைப்பது குறித்து வருவாய்த் துறையின் 23—1—1989 ஆம் நாளிட்ட 110 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு பொது வளாகங்கள் (உரிமையற்ற ஆளுகையினை வெளியேற்றுதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1976) 20 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

145. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 13—2—1989 ஆம் நாளிட்ட 133 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

146. தஞ்சாவூர் அங்காடிக் குழுமத்திலிருந்து சில கிராமங் களை நீக்குவது குறித்து வேளாண்மைத் துறையின் 31—3—1989 ஆம் நாளிட்ட 244 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

147. கையினால் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகளின் விற்ப னைக்கு வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 12—5—1989 ஆம் நாளிட்ட